**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**CC.No. 44/2020 D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பால்ராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **த/பெ. சிலுவைகுருஸ்** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 01.03.2024**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆவேன். சகாயராணி எனது மனைவி ஆவார். கடல் தொழிலுக்காக லைசனிடம் பணம் கேட்டிருந்தேன். அவர் தன்னிடம் தற்சமயம் இல்லை என்று கூறினார். தனக்கு தெரிந்த நபரிடம் கேட்டு சொல்வதாக கூறினார்.

2. 16.06.2015 ம் தேதி என்னிடம் கேட்டு வந்து சொன்னார். அந்த நபர் பணம் தருவதற்கு தயாராக உள்ளதாகவும் பத்திரத்தில் கையொப்பம் செய்து தரவேண்டும் என்று 5000 ரூபாய் வட்டி என்றும் சொன்னார். நான் பராவாயில்லை வாங்கி தாங்கள் என்று சொன்னேன். புகார்தாரர் லைசன் பணத்தையும் பத்திரத்தையும் கொண்டு வந்தார். முதலில் பத்திரத்தில் கையொப்பம் இட சொன்னார். நான் போட்டவுடன். 1 இலட்சம் ரூபாய் என்னிடம் கொடுத்தார்.

3. மாசம் தவறாமல் வட்டியை கட்டி விட வேண்டும் என்று சொன்னார். நானும் மாதம் தவறாமல் கட்டி வந்தேன். 26.12.2015 ம் தேதியே நான் மேற்படி முழு தொகையும் நான் அடைத்து விட்டேன். நான் பணத்தை திருப்பிக் கொடுத்த நிலையில் நான் எழுதி கொடுத்த பத்திரத்தைக் கேட்டேன். அதற்கு லைசன் நான் காசை கொடுத்து விட்டு வந்து பத்திரத்தை வாங்கி வருவதாக சொன்னார். பின்னர் பத்திரத்தை வாங்க ஞாபகம் இல்லாமல் வந்து விட்டதாக சொன்னார்.

4. லைசன் எனது பக்கத்து வீட்டுக்காரர். நான் அடுத்து போகும் போது பத்திரத்தை

வாங்கி தருவதாக சொன்னதால் நானும் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் நம்பி இருந்து விட்டேன். கொஞ்சம் நாளாக பத்திரத்தை திருப்பி தரவில்லை. நான் அடிக்கடி கேட்பேன். அதற்கு அவர் நமக்குள்ளது தானே எந்த பிரச்சனையும் வராது என்று கூறினார். அண்ணனாக இருந்தாலும் தம்பியாக இருந்தாலும் பத்திரத்தை வாங்கி விடு என்று தெரிந்தவங்க சொன்னாங்க. பலமுறை கேட்டும் பத்திரத்தை அவர் தரவில்லை. அதன் பிறகு நான் கேட்கவும் இல்லை. அவர் தரவும் இல்லை.

5. 15.07.2019 ம் தேதி குளச்சல் காவல் நிலையத்தில் என் மீது புகார் தெரிவித்து என்னை விசாரித்தார்கள். நானும் நடந்ததை சொன்னேன். மேற்படி காவல் துறை அதிகாரிகள் என்னை கட்டாயப்படுத்தி உதவி ஆய்வாளர் சுஜித் ஆனந்த் என்பவர் என்னிடம் இருந்து காசோலை கேட்டார். என்னிடம் அன்றைய தினம் காசோலை எதுவும் இல்லை. அவர் என்னை பைக்கில் அழைத்துக் கொண்டு பாரத ஸ்டேட் வங்கி குளச்சலுக்கு சென்றார்.

6. அங்கு அவர் மேனஜரிடம் பேசி அதனடிப்படையில் எனக்கு 10 நாள்களில் காசோலை புத்தகம் வந்தது. இதனை தெரிந்து கொண்டு காவல் துறையினர் மீண்டும் என்னை விசாரணைக்காக அழைத்து சென்று என்னை கட்டாயப்படுத்தி நாலு காசோலைகளில் என் விருப்பம் இல்லாமல் கையொப்பம் பெற்று அந்த காசோலைகளை அவர்கள் வைத்துக் கொண்டார்கள். நான் கையெழுத்து போடா விட்டால் என் மீது குண்டர் சட்டத்தில் வழக்கு போடுவதாக மிரட்டினார்கள். காசோலையில் கையெழுத்து போட்டால் எந்த பிரச்சனையும் வராது என்று சொன்னார்கள்.

7. நான் பணம் கொடுத்து விட்ட பிறகும் காவல் துறை அதிகாரிகள் புகார்ததாரருக்கு ஆதரவாக செயல்பட்டு கொடுக்காத பணத்திற்கு வலுக்கட்டாயமாக என்னுடைய 4 காசோலைகளை கட்டாயப்படுத்தி பெற்றுள்ளார்கள். அதற்கு பிறகு என்னை போக சொல்லி விட்டார்கள். அதில் 1 காசோலையை தான் இந்த கோர்ட்டில் போட்டிருக்கிறார்கள். அதனால் ஐயா எனக்கு வழக்கை விசாரித்து நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம்,**
**இரணியல்.**